## மங்கோலியா



# எரிச்சலூட்டிய சிறுமி

*“மீண்டும் அட்வெண்ட்டிஸ்ட் பள்ளியிலேயே சேருகிறாயா?” என்று கேட்டார்.*

கோவிட்-19 பொதுமுடக்கத்தால் சிறுவன் எல்பிரெலுக்கு எரிச்சலாக இருந்தது. டஸ்கல் பள்ளியில் படித்துவந்தான்; மங்கோலியாவிலிருந்த ஒரே அட்வெண்ட்டிஸ்ட் பள்ளி அது. முதன்முதலாக ஆன்லைன் வகுப்புகள் நடத்தின பள்ளிகளில் அதுவும் ஒன்று. அரசுப்பள்ளிகளில் படித்த மாணவர்கள் ஜாலியாக விளையாடிக் கொண்டிருக்க, அவன் மட்டும் கணினி முன்பாக உட்கார்ந்து, வகுப்புகளில் கலந்துகொள்ள வேண்டியிருந்தது, அது அவனுக்கு எரிச்சலாக இருந்தது.

தன்னை அரசுப்பள்ளிக்கு மாற்றமுடியுமா என்று அம்மாவிடம் கேட்டான்.

தனக்கு பிரச்சினையில்லை என்று அம்மா சொன்னார், ஆனால் அப்பா சம்மதிக்கவில்லை. அவர் அட்வெண்ட்டிஸ்ட் போதகர்; அமெரிக்காவில் அட்வெண்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தார். அம்மாவிடம் அப்பா, “நான் இப்போது மங்கோலியாவில் இல்லை. ஆனால் அவனை அரசுப்பள்ளியில் சேர்த்து அவனுடைய எதிர்காலத்தை நாம் கெடுத்துவிடக்கூடாது. அங்கு அவன் தவறான பழக்கங்களைக் கற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது” என்று சொன்னார். எனவே, அம்மா மனதை மாற்றிக்கொண்டு, எல்பிரெலிடம், அவன் அட்வெண்ட்டிஸ்ட் பள்ளியில்தான் படிக்கவேண்டும் என்று சொல்லிவிட்டார்.

ஆனால் எல்பிரெல் விடுவதாக இல்லை. “அடுத்த வருடத்தில் சேரலாமா?” என்று அப்பாவிடம் கேட்டான்.

அப்பா சம்மதிக்கவில்லை.

இனியும் பிடிவாதம் பிடித்து பயனில்லை என்று தெரிந்ததால், அதன்பிறகு எல்பிரெல் எதுவும் பேசவில்லை.

பிறகு, அரசுப்பள்ளியும் ஆன் லைன் வகுப்புகள் தொடங்கின; அதன்பிறகு மற்ற சிறுவர்களும் வகுப்புகளில்கலந்துகொள்ளவேண் டியதாயிற்று. அதனால் பள்ளியை மாற்றவேண்டும் என்கிற ஆசை யும் தணிந்தது.

பொதுமுடக்கம் முடிந்து, பள்ளி கள் திறந்தபிறகு, மீண்டும் அரசுப் பள்ளி ஞாபகம் எல்பிரெலுக்கு வந் தது. அதற்கு காரணம் அவனுடைய வகுப்பிலிருந்த ஒரு சிறுமி. அவனி டம் வம்பிழுத்து, அவனை ஏளனம் செய்துகொண்டே இருந்தாள்.

இரண்டு மாதங்கள் சென்றன, எல்பிரெலால் அதற்குமேல் தாங்க முடியவில்லை. அந்தச் சிறுமியைக் கையாளுவதைவிட பள்ளியை மாற்று வது எளிது என்று நினைத்தான். ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த தன் அப் பாவை அழைத்தான்.

‘‘அவள் என்னைக் கேலி செய்துகொண்டே இருக்கிறாள். நான் அரசுப்பள்ளியில் சேரவேண் டும்’’ என்று சொன்னான்.

அப்பா அவனிடம் பேசினார்.

‘‘சிறுசிறு விஷயங்களுக்கெல் லாம் நீ பள்ளியை மாற்றமுடியாது, அரசுப்பள்ளியில் இன்னும் பலர் உன்னைக் கேலிசெய்யலாம்’’ என்று சொன்னார்.

எல்பிரெல் விடவில்லை, இறுதி யில் அப்பா சம்மதித்தார். ‘‘அடுத்த வருடம் உன்னை அந்தப் பள்ளி யில் சேர்த்துவிடுகிறேன்’’ என்று சொன்னார்.

கோடைக்காலத்தில், அப்பா மீண்டும் மனதை மாற்றினார். ஆனா லும் அரசுப்பள்ளியில் படிக்கிற முடி வில் எல்பிரெல் உறுதியாக இருந் தான். இரண்டாம் வகுப்பிலிருந்து அட்வென்டிஸ்ட் பள்ளியில்தான் படித்துவந்தான், அதனால் வேறு பள்ளிக்கு மாறுவது வித்தியாசமான அனுபவமாக இருக்குமென நினைத் தான். தன்னை மாற்றும்படி அம்மா விடம் கெஞ்சினான். இறுதியாக, அவனது பெற்றோர் சம்மதித்தார் கள்; கவனமாக நடந்துகொள்ளும் படி அப்பா எச்சரித்தார்.

‘‘கெட்டப்பழக்கங்களுடைய சிறுவர்களுடன் சேராதே’’ என்று சொன்னார்.

அவ்வாறே செய்வதாக எல் பிரெல் சம்மதித்தான்.

அரசுப்பள்ளியில் சேர்ந்த முதல் நாளே எல்பிரெலுக்கு அதிர்ச் சியாக இருந்தது. அவனது வகுப்பி லிருந்த பல மாணவர்கள் எப்போ தும் போதைப்பொருளைப் புகைத் துக் கொண்டே இருந்தார்கள். ஒரு வரை ஒருவர் எப்போதும் கேலி செய்தார்கள். பள்ளி முடிந்த பிறகு, ஒன்றாகச் சேர்ந்து, குடித்தார்கள். அப்படிப்பட்ட நண்பர்களுடன் சேர எல்பிரெல் விரும்பவில்லை.

மேலும், மதிய உணவு விஷ யத்திலும் எல்பிரெலுக்கு சிக்கல் உண்டானது. அட்வென்டிஸ்ட் பள் ளியில், பள்ளி உணவகத்தில் மதி யம் சைவசாப்பாடு கிடைக்கும். ஆனால் அரசுப்பள்ளியில் உண

வகம் கிடையாது. சாப்பாடு வாங்குவதற்காக தெருவில் வெகுதூரம் செல்லவேண்டியிருந்தது.

சில நாட்கள் சென்றன, எல்பிரெலுக்கு இன்னொரு பிரச்சினை ஆரம்பித்தது. வீட்டுப்பாடங்களும் பிரயோஜனமாக இல்லை. ஆசிரியர்கள் சொல்லிக்கொடுக்கிற பாடங்கள் ஏற்கனவே அவனுக்குத் தெரிந்திருந்தன.

ஒரு மாதத்திற்குள்ளாக எல்பிரெலுக்கு போதும்போதும் என்றாகிவிட்டது. அப்பா சொன்னதைக் கேட்டிருக்கலாமெ என்று யோசித்தான், ஆனால் தான் தவறுசெய்துவிட்டதாக அப்பாவிடம் போய்ச் சொல்வதற்கு அவனுக்கு சங்கடமாக இருந்தது. ‘தேவனே, நான் என்ன செய்வது? என்னைச் சுற்றிலும் மோசமான செல்வாக்குகள் உள்ளன, எதையும் கற்றுக்கொள்ள முடியவில்லை, இந்தப் பள்ளியில் இருக்கிற அரசுப் பள்ளியிலேயே இருந்துவிடுவதா? அல்லது மீண்டும் அட்வென்ட்டிஸ்ட் பள்ளியிலேயே சேர்ந்து, அந்தச் சிறுமியைக் கையாளுவதா?’ என்று ஜெபித்தான்.

அடுத்தநாள், எல்பிரெலின் அம்மா அவனிடம் வகுப்புகள் பற்றி விசாரித்தார். அங்கே பாடம் படிக்க முடியவில்லை என்று அறிந்ததும், “மீண்டும் அட்வென்ட்டிஸ்ட் பள்ளியிலேயே சேருகிறாயா?” என்று கேட்டார்.

அந்தக் கேள்வி அவன் காதில் தேனாகப் பாய்ந்தது. தேவன் தன் ஜெபத்திற்குப் பதிலளிப்பதை உணர்ந்தான். “சரி, நான் அட்வென்ட்டிஸ்ட் பள்ளியிலேயே சேருகிறேன்” என்றான்.

அந்தச் செய்தியைக் கேட்டபோது அப்பாவுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

“இப்போதுகூட தாராளமாக அங்குபோய்ச் சேரலாம்” என்று சொன்னார்.

ஒரு சில நாட்களில் மீண்டும் டஸ்கல் பள்ளிக்கு மாறினான். அந்தச் சிறுமியைக் கையாள அவனிடம் ஒரு திட்டமும் இருந்தன. “அவளைக் கண்டுகொள்ளக்கூடாது. அவளை நான் கண்டுகொள்ளாவிட்டால் அவளால் எனக்குப் பிரச்சினை வராது என்று அப்பா சொன்னார்” என்று சொன்னான்.

மங்கோலியாவின் ஊலான்படார்ரில் அமைந்திருக்கும் டஸ்கல் பள்ளியில் புதிய வகுப்பறைகளும் நூலகமும் கட்டுவதற்கு கடந்த பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி பயன்பட்டது. இந்தக் காலாண்டில் நீங்கள் கொடுக்கப்போகிற பதின்மூன்றாம் வாரக் காணிக்கைக்காக நன்றி; ஊலான்படார்ரில் சிறுவர்களுக்கு இயேசுவை அறிவிப்பதற்கு அங்கு ஒரு மறுவாழ்வு மையம் திறப்பதற்கு காணிக்கை உதவும்.

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் மங்கோலியாவின் தலைநகர் ஊலான்படார்ரைக் காண்பியுங்கள்.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.